# கைநூல்

# மரநடுகைப்போட்டித்திட்டம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
TAMILS REHABILITATION ORGANIZATION
83/2, கே. கே. எஸ் வீதி,
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ நடவடிக்கைகளாலும், இயற்கை அனர்த்தங்களாலும் எமது தேசத்தின் வளங்கள் அருகிக்கொண்டே செல்கின்றன. அருகிக்கொண்டே செல்லும் எமது தேசத்தின் வளங்களை பாதுகாப்பது இங்குள்ள எல்லோரதும் கடமையாகும். அந்தவகையில் பாடசாலைகள், பாடசாலை மாணவர்கள் பங்குகொள்ளும் மரநடுகைப் போட்டித் திட்டமொன்றை தொடர்ச்சியான 03 ஆண்டுகளுக்கு மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம்.

மேற்படி எமது திட்டம் பூரண வெற்றிபெற அனைத்துத்தரப்பினரும் எமக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குவீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் இத்திட்டத்தினை உங்கள்முன் சமர்ப்பிக்கின்றோம்.

நன்றி

30-10-1992

செயலாளர்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள், மாணவர்களுக்கான
# மரநடுகைப் போட்டித் திட்டம்
# தொடர்பான விளக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மரநடுகைத் திட்டத்தில் ஈடுபட்டு சூழலைப் பாதுகாப்போம்"

பங்குகொள்ளும் மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் பெறுமதிமிக்க பரிசுகள்

கடும் வரட்சி, இயற்கை அனர்த்தங்கள், போர்க்காலச் சூழ்நிலைகள் ஆகியவற்றினால் எமது முன்னோர்கள் வளர்த்த மரங்கள் பெருமளவில் அழிந்துவிட்டன.

மாணவர்களே! எதிர்காலச் சந்ததியினரான நீங்களே இப்பாதிப்புக்குப் பலியாகப் போகின்றீர்கள். உங்களுடைய எதிர்கால வாழ்வின் நலன் கருதி மர நடுகையை தீவிரமாக்கி உங்கள் சூழலைப் பாதுகாக்க முன்வருமாறு அழைக்கின்றோம். மாணவர்களும்பாடசாலைகளும் பங்குபற்றும் இரு திட்டங்கள் எங்களால் முன்வைக்கப்படுகின்றன.

## பாடசாலை மாணவர்கள் பங்குகொள்ளும் திட்டம்

### அ. உதவியுடன் நடுதல்

பாடசாலை மாணவர் ஒருவர் தமது வீட்டுக்கு அருகாமையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அனுமதிக்கும் இடத்தில் ஐந்து மரக்கன்றுகளை நடுகை செய்ய வேண்டும். அவ்விடம் வீதியோரமாகவோ அன்றி பொது இடமாகவோ இருக்கும். நடுகைக்காக மரக்கன்றுகள் கொடுக்கப்படும். அத்துடன் ஒவ்வொரு மரத்தையும் அடைத்துப் பராமரிப்பதற்கு ரூபா 100-00 கொடுக்கப்படும். இம் மரங்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு மாணவரால் நீர் ஊற்றி பராமரிக்கப்படும். பராமரிக்கின்ற காலத்தில் ஒவ்வொரு மாதமும் ரூபா 25 வீதம் அம்மாணவரின் பெயரில் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்படும். சேமிப்புப் புத்தகம் மாணவனிடம் கையளிக்கப்படும். ஒரு மாணவனுக்கு 25-00 வீதம் 36 மாதங்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும். தெரிவு செய்யப்படவுள்ள மாணவர்கள் தொகை 1000 ஆகும். இத்திட்டத்தில் கலந்து கொள்வோர் 6ம் ஆண்டு முதல்-10 ஆம் ஆண்டு வரையான மாணவர்களாக இருக்க வேண்டும்.

மரங்கள்நட்டு பராமரித்து வளர்த்தெடுப்பதில் முதன்மை பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. இப்பரிசுகள் ஒவ்வொரு வருடத்திலும் மாணவர்களைத் தெரிவு செய்து வழங்கப்படும். தெரிவு ஒக்டோபர் மாதத்தில் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கல்விக் கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்களுக்கும் ஒவ்வொரு கோட்டத்திலும் பின்வருமாறு பரிசுத்தொகை வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1வது இடம் | ரூபா | 5,000-00 |
| 2வது இடம் | ரூபா | 2,500-00 |
| 3வது இடம் | ரூபா | 1,250-00 |

2. மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்களுக்குமான பரிசுத் தொகை பின்வருமாறு அமையும்,

| | | |
|---|---|---|
| 1வது இடம் | ரூபா | 10,000-000 |
| 2வது இடம் | ரூபா | 5,000-00 |
| 3வது இடம் | ரூபா | 2,500-00 |

## ஆ. சுயமாகவே நடுதல்

தாமாகவே முன்வந்து வீதியோரம் அல்லது பொது இடங்களில் மரத்தினை நட்டு பராமரிப்பதில் முதன்மை பெறும் மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படும். ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலும் இருந்து வருடா வருடம் 10 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பரிசுத் தொகையாக ரூபா 3,000-00 கொடுக்கப்படும். ஆனால் பராமரிப்பதற்கு எவ்வித செலவும் கொடுக்கப்படமாட்டாது. மரங்களின் எண்ணிக்கை, செழிப்பு, ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவுக்கான மதிப்பீடு நடைபெறும். இவ்வாண்டு தாமாகவே மரங்களை நட்டுப் பராமரிப்பவர்கள் அடுத்த நிதியுதவியுடன் நடும் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

## இ. பாடசாலைகள் பங்குகொள்ளும் திட்டம்

வருங்கால சந்ததியினரின் தேவைகளை அச்சந்ததியினருக்கு உணர்த்தி ஊக்கமுடன் செயற்படும் நிறுவனமாகப் பாடசாலைகள் இருக்கின்றன. அவை இம் மரநடுகை இயக்கத்தில் ஊக்கத்துடன் பங்கு கொள்ளும் நோக்கில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுவது எதிர்பார்க்கப்படுகிறது.

1. தெரிவு செய்யப்பட்டு குறித்தொதுக்கிய இடத்தில் மரம் நட்டுப் பராமரிக்கின்ற மாணவர்களினதும், தாமாகவே முன் வந்து வீதியோரத்தில் அல்லது பொது இடங்களில் மரங்களை நடுகின்ற மாணவர்களினதும் செயற்பாட்டை ஊக்கப்படுத்தி ஒழுங்கான கண்காணிப்புச் செய்தல்.

2. பாடசாலை வளவிலோ அல்லது பொது இடங்களிலோ பாடசாலைகள் தாமாக மரங்களை நட்டுப் பராமரித்தல். ஒரு பாடசாலை குறைந்தது பத்து மரங்களையாவது நட்டுப் பராமரித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாடசாலை மாணவர்களிடையில் மரநடுகை தொடர்பாக அறிவினை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

மேற்குறித்த செயற்பாட்டினைத் திறம்படச் செய்கின்ற பாடசாலைகளைத் தெரிவுசெய்து அவற்றிற்கு சான்றிதழ்களும் ஒரு தொகைப் பரிசுகளும் வழங்கப்படும். இச்செயற்பாடு 1992ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து தொடங்கி 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் வரை நீடிக்கும். மூன்று வருடகாலத்திற்கு வருடா வருடம் பரிசுகள் வழங்கப்படும். கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் பாடசாலைகளுக்கான பரிசுகள் பின்வருமாறு அமையும்.

| | | | |
|---|---|---|---|
| 1வது இடம் | — | ரூபா | 10,000-00 |
| 2வது இடம் | — | ரூபா | 5,000-00 |
| 3வது இடம் | — | ரூபா | 2,500-00 |

மர நடுகைத் திட்டத்தில் பங்கு கொள்ள விரும்பும் மாணவர்களும் பாடசாலைகளும் இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்தைத் தயாரித்து பூர்த்திசெய்து அனுப்பிவைக்க வேண்டும்.

சகல விண்ணப்பங்களும் கீழே விலாசமிடப்பட்டுள்ள எமது தலைமைக் காரியாலயத்துக்கோ அல்லது எமது பிரிவுக் காரியாலயங்களுக்கோ அனுப்பி வைக்கவும்.

மரம் நடுவோம்!

சூழலைப் பாதுகாப்போம்!

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
83/2, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

# செலவு மதிப்பீடு

## உதவித் திட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.1 | மரக் கன்றுகள் | | | 4,000 | இலவசம் |
| 1.2 | கூடு அடைத்து நடுதல் | 100 | X | 5000 | 5,00,000-00 |
| 1.3 | பராமரிக்கும் மாணவருக்கு | 25 | X | 1000-00 | |
| | | | 36 | (மாதம்) | 9,00,000-00 |
| | | | | | 14,00,000-00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மாணவர்களுக்கான பரிசுகள்
உதவித் திட்டம்

கோட்ட மட்டத்தில்

| | |
|---|---|
| 1வது பரிசு 5,000 X 6 X 3 வருடம் | 90,000-00 |
| 2வது பரிசு 2,500 X 6 X 3 வருடம் | 45,000-00 |
| 3வது பரிசு 1,250 X 6 X 3 வருடம் | 22,500-00 |

மாவட்ட மட்டம்

| | |
|---|---|
| 1வது பரிசு 10,000 X 3 வருடம் | 30,000-00 |
| 2வது பரிசு 5,000 X 3 வருடம் | 15,000-00 |
| 3வது பரிசு 1,250 X 3 வருடம் | 7,500-00 |
| | 2,10,000-00 |

3. மாணவர்களுக்கான பரிசுகள்
உதவியில்லாத் திட்டம்

| | |
|---|---|
| 3,000 X 6 X 10 X 3 வருடம் | 5,40,000-00 |

4. பாடசாலைகளுக்கான பரிசுகள்

கோட்ட மட்டம்

| | |
|---|---|
| 1வது பரிசு 10,000 X 3 X 6 | 1,80,000-00 |
| 2வது பரிசு 5,000 X 3 X 6 | 90,000-00 |
| 3வது பரிசு 2,500 X 3 X 6 | 45,000-00 |

மாவட்ட மட்டம்

| | |
|---|---|
| 1வது பரிசு 50,000 X 3 | 1,50,000-00 |
| 2வது பரிசு 30,000 X 3 | 90,000-00 |
| 3வது பரிசு 15,000 X 3 | 45,000-00 |
| | 6,00,000-00 |

| பணத்தின் தேவை | 1ம் வருடம் | 2ம் வருடம் | 3ம் வருடம் |
|---|---|---|---|
| உதவித் திட்டம் | | | |
| உதவி | 8,00,000-00 | 3,00,000-00 | 3,00,000-00 |
| உதவித் திட்டப் பரிசு | 70,000-00 | 70,000-00 | 70,000-00 |
| உதவியில்லாத் திட்டம் - பரிசு | 1,80,000-00 | 1,80,000-00 | 1,80,000-00 |
| பாடசாலை - பரிசு | 2,00,000-00 | 2,00,000-00 | 2,00,000-00 |
| | 12,50,000-00 | 7,50,000-00 | 7,50,000-00 |
| நிர்வாகச் செலவு 10 வீதம் | 1,25,000-00 | 75,000-00 | 75,000-00 |
| | 13,75,000-00 | 8,25,000-00 | 8,25,000-00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பலன்கள்**

மூலதனத்திற்கான வட்டி முதலியவற்றைக் கணக்கிலெடுக்கின்ற போதும், வளர்த்தெடுக்கப்படும் மரத்தின் வளங்கள் இதனைவிட பலமடங்கு கூடியதாக இருக்கும்.

2. உதவியில்லாத் திட்டத்தில் வெற்றிகரமாக 1500 மரங்களை வளர்த்தெடுத்துக் கொண்டால் அதுவும் இலாபகரமானதாக இருக்கும் இதற்கு 300 மாணவர்கள் போதுமானவராவார்.

காலம் காலமாக செய்யப்பட்டு தோல்வி கண்ட மரநடுகைக்கு புதியதொரு அமைப்பு முறையைக் கொடுக்கின்றது. மாணவர்கள் ஆசிரியர்கள் சமூகம், ஆகியவற்றிற்கிடையில் மரநடுகை தொடர்பாக ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி மதிப்பீட்டிற்கான வழிகாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர், பாடசாலைகளுக்கிடையிலான மரநடுகைப் போட்டிக்கான முன்னேற்ற மதிப்பீட்டு வழிகாட்டி

1. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயல்படுத்தும் மரநடுகைக்கான போட்டியில் பங்குகொள்ளும் ஒவ்வொரு மாணவனினதும் பாடசாலைகளினதும் மரநடுகை தொடர்பான முன்னேற்றம் தனித்தனியே ஒவ்வொருமாதமும் மதிப்பிடப்படவுள்ளது.

2. 1992 நவம்பர்மாதம் தொடக்கம் 1993 ஒக்டோபர் மாதம் முடியவுள்ள காலப்பகுதிக்கு மாதாமாதம் இம்மதிப்பீடு செய்யப்படும்.

3. கொத்தணி மட்டத்தில் மரநடுகை தொடர்பாக உள்ள குழு ஒவ்வொரு பாடசாலைக்கும் மாதந்தோறும் சென்று மாணவரினதும் பாடசாலையினதும் முன்னேற்றம்பற்றி நேரில் பரிசீலனை செய்து மதிப்பீட்டுக்கான வழிகாட்ட வேண்டும். இதன்பின்னர் குறிப்பிடும் நெறிகளின் அடிப்படையில் கணக்கிட்டு அவற்றுக்குரிய படிவத்தில் பூர்த்திசெய்வார்கள். இவர்கள் ஒவ்வொரு மாதமும் முடிய வருகின்ற 10ம் திகதிக்கு முன்னர் இம்மதிப்பீட்டினைச் செய்து கோட்ட மட்டத்திலான குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

4. கோட்டமட்டக் குழு தனது பகுதியில் பங்குபற்றும் மாணவரினதும்பாடசாலையினதும் மொத்தத் தொகையில் 10 வீதத்தினை தெரிவுசெய்து நேரில் சென்று பார்வையிடவேண்டும். மாதாந்தம் 10 வீத அடிப்படையில் தெரிவுசெய்யும் பொழுது ஒருமுறை தெரிவுசெய்யப்பட்ட மரமோ, மாணவரோ திரும்பவும் தெரிவு செய்யப்படுவதாயின் அதற்கு முன்னர் கோட்டத்தில் உள்ள முழு மரமோ அல்லது மாணவரோ முதல்தர பார்வைக்குட்பட்டு இருப்பார்கள். குழு நேரில் சென்று பார்வையிடுகின்றபோது கொத்தணிக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் தரத்தினை உறுதிப்படுத்தும். இதனால் கோட்டம் முழுவதும் ஒரே சீரான மதிப்பீடு அமைவதற்கு இது வழிவகுக்கும். கோட்டமட்டக் குழுவினால் சரிபார்த்தபின்னர் கொத்தணிக் குழுவினால் அனுப்பப்பட்ட முழு மதிப்பீட்டு அறிக்கையும் அம்மாதம் 20ம் திகதிக்கு முன்னர் மாவட்டக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டக்குழு கோட்டத்தினால் அனுப்பப்படும் மாணவருக்கான உதவிபெறும், உதவி பெறாத போட்டிகளினதும் பாடசாலைகளுக்கான போட்டியினதும் மதிப்பீடுகளை தனித்தனியே மாதாந்தம் திரட்டி முன்னுரிமை அடிப்படையிலான பட்டியல் ஒன்றினை முடிவில் தயாரித்து முடிக்கும்.

அப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு இறுதித்தீர்ப்பு வழங்க நியமிக்கப்படவுள்ள நடுவர் குழு தனது மதிப்பீட்டினை மேற்கொண்டு பரிசிலுக்குரியவர்களை இறுதியாக தீர்மானிக்கும்.

## மாதாந்த முன்னேற்ற மதிப்பீட்டு படிவம்

**1. மாணவருக்கான உதவிபெறும் மரநடுகைப் போட்டி**

1992........................................மாதத்துக்கான அறிக்கை

பாடசாலை:.................................. கொத்தணி;........................

கோட்டம்;.................................... திகதி:................................

| குறியீடு (1) | தொடர் இல. (2) | மாணவரின் முழுப்பெயர் (3) | மரத்தின் எண்ணிக்கை வளர்ச்சி 60 புள்ளிகள் (4) | பராமரிப்பு மாணவரின் முயற்சி 40 புள்ளிகள் |
|---|---|---|---|---|
| | | | | |

சரிபார்த்த குழுவின் கையொப்பம் 1.

2.

3.

4.

திகதி:.......................... 5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மாணவருக்கான உதவிபெறாத மரநடுகைப் போட்டி

1992.................................... மாதத்துக்கான அறிக்கை

பாடசாலை:.................................. கொத்தணி:..............................

கோட்டம்:..................................

| குறியீடு 1) | தொடர் இல. (2) | மாணவரின் முழுப்பெயர் (3) | மரத்தின் எண்ணிக்கை வளர்ச்சி 60 புள்ளிகள் (4) | பராமரிப்பு மாணவனின் முயற்சி (40 புள்ளிகள்) (5) |
|---|---|---|---|---|
| | | | | |

சரிபார்த்த குழுவின் கையொப்பம்: 1,
2.
3.
4.
5.

திகதி:..............................

## 3. பாடசாலைகளுக்கான போட்டி:

1992.................................... மாதத்துக்கான அறிக்கை

கொத்தணி:.................................. கோட்டம்..............................

| குறியீடு (1) | தொடர் இல. (2) | பாடசாலையின் பெயர் (3) | மரத்தின் எண்ணிக்கை/ வளர்ச்சி 40 புள்ளிகள் (4) | பராமரிப்பு மாணவ—ஆசிரிய முயற்சி 20 புள்ளிகள் (5) | மாணவரால் நடப்படும் மரங்களை கண்காணிக்கும் முயற்சி 20 புள்ளிகள் 6 | மாணவரையும் சுற்றாடலையும் ஊக்குவிக்கும் முயற்சி 20 புள்ளிகள் (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

சரிபார்த்தல் குழுவின் கையொப்பம் குழுவின் கையொப்பம்

திகதி:.............................. திகதி:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்ற மதிப்பீடு மேற்கொள்ளும் திறன்முறை

## 1. மாணவர்களுக்கான உதவிபெறும் மரநடுகைப் போட்டி

1. கோட்டத்தைக் குறிக்க ஒரு எழுத்தும் கொத்தணியைக் குறிக்க இன்னொரு எழுத்தும் பின்னர் பாடசாலையைக் குறிக்க இன்னொரு எழுத்துமாக மூன்று எழுத்துக்களைப் பயன்படுத்தலாம். இது மாவட்ட/கோட்டக் குழுவினால் தீர் மானிக்கப்படும்.

2. குறியீட்டு எண்ணுடன் ஒவ்வொரு கொத்தணிக்கும் பங்கு பற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் இலக்கம். இது ஒவ் வொரு மாதாந்த அறிக்கையிலும் ஒரேவிதமாக குறிப்பிட வேண்டும்.

3. மாணவரின் சொந்தப்பெயர் கடைசியில் வரும்படி எழுத வேண்டும்.

4. மரத்தின் எண்ணிக்கையும் அதன் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு ஆக உச்சமாக 60 புள்ளிவரை இடலாம், புள்ளி இடும்போது

   அ) மரத்தின் வயதும் அதன் வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பு

   ஆ) ஒரு மாணவருக்குரிய மரத்தில் குறை ஏற்பட்டால் அது கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டும்.

   இ) இருக்கின்ற ஒவ்வொரு மரத்துக்கும் தனித்தனியே புள்ளி மதிப்பீடு செய்து பின்னர் அவற்றின் சராசரியில் இதற் குரிய புள்ளிகள் கணக்கிடப்படும்.

5. மரத்தின் பராமரிப்பும் அதற்கான மாணவனின் முயற்சிக்கும் 40 புள்ளிகள் இடப்படலாம். அதற்கு பின்வருவன கவனத் தில் எடுக்கப்படவேண்டும்.

   அ) மரத்துக்கான பாதுகாப்பு ஒழுங்குமுறை,

   ஆ) மரத்துக்கு பசளையிடல், பூச்சி புழுக்கள் தாக்காது பாதுகாத்தல்,

   இ) நிலத்தைப் பண்படுத்தலும் பராமரித்தலும்,

   ஈ) அவ்விடத்தின் நிலத்தின் தன்மை, நீர்வளம் ஆகியவற் றைக் கருத்தில் கொண்டு மாணவன் நிலத்தை வளமாக் கவும் நீரை கொண்டுவந்து ஊற்றவும் எடுக்கும் முயற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மாணவர்களுக்கான உதவிபெறாத மரநடுகை தொடர்பான மதிப்பீடும் மேற்குறிப்பிட்ட முறையில் மதிப்பீடு செய்யப் படலாம்.

3. பாடசாலைகளுக்கான போட்டி

1. மாணவர்களுக்கு குறித்த கோட்ட, கொத்தணிக் குறியீடு களை பாவிக்கலாம்.

2. தொடர் இலக்கத்தை பாடசாலையை குறிக்க பயன்படுத் தலாம். ஒருமுறை வழங்கப்பட்ட தொடர் இலக்கம் அறிக்கை செய்யப்படும் முழுக்காலமும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.

3. பாடசாலையை குறிக்கும் பெயர்

4. பாடசாலையினால் வளர்க்கப்படும் மரங்களின் எண்ணிக்கை அதன் வளர்ச்சிக்கு 40 புள்ளிகள் வழங்கலாம். மதிப்பீட்டில் பின்வருவன கவனிக்கப்படவேண்டும்.

அ) பாடசாலையில் உள்ள மாணவர்தொகையும் நடப்பட் டுள்ள மரங்களின் எண்ணிக்கையும்.

ஆ) மரத்தின் வயதுக்கும் அதன் வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பு.

இ) நடப்பட்ட மரங்களில் ஏற்பட்டுள்ள குறைவு அல்லது அழிவு

5. மரத்தின் பராமரிப்பு – அதில் மாணவ, ஆசிரியரின் முயற்சி என்பவற்றுக்கு 20 புள்ளிகள் வழங்கப்டும். அதனை வழங்கு வதற்கு பின்வருவன கருத்தில் கொள்ளப்படவுள்ளன.

அ) மாணவர்தொகையும் மரநடுகை முயற்சியில் ஈடுபட் டுள்ள ஆசிரியர் தொகையும்

ஆ) மரத்துக்கான பாதுகாப்பு ஒழுங்குமுறை

இ) மரத்துக்கு பசளையிடல் பூச்சி, புழுக்கள் தாக்காது பாதுகாத்தல்

ஈ) நிலத்தைப் பயன்படுத்தலும் பராமரித்தலும்.

உ) அவ்விடத்தில் நிலத்தின் தன்மை நீர்வளம் ஆகியவற் றின் அடிப்படையில் மேற்கொள்ளும் முயற்சி

6. மாணவர்கள் நட்டுப் பராமரிக்கும் மரங்களை கண்காணிப்பு செய்வதற்காக எடுக்கும் முயற்சிக்காக 20 புள்ளிகள் வழங் கப்படும். பின்வருவன அவற்றுக்கான மதிப்பீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. மாணவர்களின் மரங்களின் மாதாந்த முன்னேற்றத்தை கவனிப்பதற்கு கல்லூரியால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குமுறை, அதன் செயற்பாடு.

ஆ) மாதாந்த செயல்பாட்டு அறிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வழிகாட்டல்,

7. மாணவர்களையும் சுற்றாடலில் உள்ளவர்களையும் மரநடுகையின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஈடுபடச்செய்வதற்கு மேற்கொள்ளும் முயற்சிக்கு 20 புள்ளிகள் இடப்படும்.

அ) இதற்காக எழுத்து, செயல்பாடு ஆகியவற்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

மேற்கூறிய வழிகாட்டுதலை கோட்ட மட்டக்குழு நன்கு புரிந்து கொத்தணி குழுக்களுடன் கலந்துரையாடி செயல்படுவதன்மூலமே சரியான மதிப்பீட்டினை செய்யமுடியும். இதனை அவர்கள் சமூக உணர்வுடன் செய்துமுடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்ற அறிக்கை

திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 31-12-1992ம் திகதி வரையான காலப்பகுதிக்கான முன்னேற்ற மதிப்பீட்டு அறிக்கை கீழே தரப்படுகின்றது.

## (அ) பாடசாலைகள், மாணவர்களுக்கான மரவிநியோகம்

| கோட்டம் | பங்குபற்றும் பாடசாலைகளின் எண்ணிக்கை | பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 49 | 212 |
| 2. மருதனாமடம் | 86 | 218 |
| 3. வடமராட்சி | 81 | 188 |
| 4. தென்மராட்சி | 26 | 193 |
| 5. வேலணை | 21 | 90 |
| | 263 | 901 |

## (ஆ) நாட்டப்பட்டுள்ள மரங்களின் எண்ணிக்கை

| கோட்டம் | பாடசாலைகள் | மாணவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 490 | 1060 | 1550 |
| 2. மருதனாமடம் | 860 | 724 | 1584 |
| 3. வடமராட்சி | 805 | 910 | 1715 |
| 4. தென்மராட்சி | 260 | 970 | 1230 |
| 5. வேலணை | 210 | 450 | 660 |
| | 2625 | 4114 | 6739 |

(இ) திட்டத்தின் நடைமுறைகள், அமுலாக்கல், முன்னேற்ற மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் போன்ற தேவைகளுக்காக கொத்தணி, கோட்டம், மாவட்டம் மட்டத்திலான நெறிப்படுத்தும் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளரை பிரதம ஆலோசகராகக் கொண்ட 05 பேர் கொண்ட குழு மாவட்டம் முழுவதற்கும் நெறிப்படுத்தல் குழுவாகச் செயற்படும். ஒவ்வொரு கோட்டத்தின் மட்டத்திலும் பிரதிக் கோட்ட கல்வி அதிகாரிகள் தலைமையில் 05 பேர் அடங்கிய குழு கோட்டங்கள் மட்டத்திலும், கொத்தணி ரீதியாக கொத்தணி அதிபர் தலைமையில் 05 பேர் கொண்ட குழு கொத்தணி மட்டத்திலும் திட்டத்தின் நெறிப்படுத்தலை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org